மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லே.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லே.

DR. H. V. HANDE : May I know the reasons why there is such a delay with regard to introduction of beneficial measures and welfare measure among the beedi workers? Will the Government go on waiting till the Centre intervenes or gives some recommendation, or as an *ad hoc* arrangement is the Government prepared to comeforward with some sort of welfare measures to the beedi workers?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: தலேவரவர்களே, நான் ஏற்கனவே முன் கேள்விக்குச் சொன்ன விவரப்படி நீதி மன்றத்திலே வழக்கு உள்ளதால் ஒன்றும் செய்ய இயலவில்லே. விரைவில் அதைப்பற்றி முயற்சி எடுக்கப்படும்.

பசுவந்தனே உயர்நிலேப்பள்ளி மாணவர்களுக்கு விடுதி

*** 134 வினு.—திரு எம். முத்தையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுக்கா பசுவந்தனே உயர்நிலேப் பள்ளியில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக ஹாஸ்டல் ஒன்று வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆமெனில், அந்த விண்ணப்பங்கள் எப்போது வந்தது ?

(உ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லே.

(இ), (உ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. எம். முத்தையா : தலேவரவர்களே, இந்த பசுவந்தனே ஹைஸ்கூல் வந்து ஏறத்தாழ 10, 12 வருஷங்கள் ஆகின்றன. இதற்குப் பலமுறை ஹாஸ்டல் வேண்டுமென்று நானே அமைச்சரவர்களுக்கும், மாவட்ட அதிகாரிகளுக்கும் அப்ளிகேஷன் அனுப்பியிருக்கிறேன். அங்குள்ள மாவட்ட நல அதிகாரிகள், பசுவந்தனே ஹைஸ்கூலுக்கு அரிசன, பின்தங்கிய மாணவர்கள் 6, 7 மைல்களுக்கு அப்பாலிருந்து படிக்க வருகிறுர்கள், எனவே இந்த ஹைஸ்கூலுக்கு ஹாஸ்டல் தேவை என்று அவர்களுக்கும் குறிப்பு அனுப்பியிருக்கிறுர்கள். அப்படியிருந்தும் அமைச்சரவர்கள் இல்லே என்று சொல்வது குறித்து வருந்துகிறேன். இப்பொழுது இல்லேயென்ருலும் இனிமேலாவது இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாவட்ட நலத் துறை அதிகாரி பரிந்துரை செய்து அனுப்பிய பல விடுதிகளில் இந்த பசுவந்தனேயும் ஒன்ருக வந்திருக்கிறது. அதனுல் அது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த மனுவின் மீது அவர்கள் சிபாரிசு செய்தார்களா என்ற குறிப்பு இருக்கவில்லே. அவர்களது

1972 சனவரி 29]

குறிப்பிலே, அந்த இடத்தில் இருக்கும் பள்ளியில் வெறும் 27 மாணவர்கள்தான் இருப்பதாகக் கூறுகிருர்கள். அதிலும் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் அந்த மாணவர்கள் விடுதி அவசியமில்லை என்று அவர்கள் விளக்கம் தந்திருக்கிருர்கள். எனவே அதை வைத்து அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காகித தொழிற்சாலைகள்

** 135 வின.—திரு. கு அ. பொம்மன்:* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் காகித தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இம்மாவட்டம் தொழிற்சாலையில் மிகமிகப் பின்தங்கியிருப்பதாலும், அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய கச்சாப் பொருள்கள் நிறைய இருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஓரளவிற்குத் தீர்க்கும் முறையிலேயும் இங்கு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் புனராலோசனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்குத் தேவையான மூலப் பொருள் அதிக அளவிற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது.

** 136 வின.—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில்லில் மாநில அரசு எவ்வளவு ரூபாய் முதலீடு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் நாடு அரசாங்கம் சேஷசாயி பேப்பர் மில்லில் நேரடியாக முதலீடு எதுவும் செய்ய வில்லை. ஆனல் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்த பேப்பர் மில்லில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்க நிறுவனத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறோம். அந்தக் கம்பெனியை ஆரம்பித்தவர்கள்